**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**

**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**

**<u>மோ.வா.வி.கோ.மனு எண். 110/2019</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - | திரு.மகேஷ்குமார் | எ.ம.சா.2 |
| த/பெ | - | | |
| கிராமம் | - | | |
| தாலுகா | - | | |
| தொழில் | - | | |
| ஜாதி | - | | |
| மதம் | - | | |
| வயது | - | | |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2023 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 20-ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனது சாட்சியத்தை நிரூபண உறுதி கூற்றாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் எனது அறிவுரையின் பேரில் அது தயார் செய்யப்பட்டது.

1. TN 74 B 7250 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்திற்குரிய பாலிசி நகல் நிபந்தனைகள் அடங்கியது **எ.ம.சா.ஆ.1.**

மனு தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் தாக்கல் செய்துள்ள பாலிசியை பொறுத்த வரை மனுதார் 3 ம் தரப்பினர் என்றால் சரிதான். பாலிசி 25.11.2017 ல் போடப்பட்டது என்றால் சரிதான். பாலிசியை போடும் போது சம்பந்தப்பட்ட வாகனத்திற்கான ஆவணங்களை சரிபார்த்து காப்பீடு வழங்கப்படும் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 பாலிசி வழங்கும் போது விபத்து வாகனத்திற்கு பதிவு சான்று இல்லை

A BARSAD BEGUM Digitally signed by A BARSAD BEGUM Date: 2023.10.20 18:21:04 +0530

என்றால் சரிதான். பதிவு சான்று இல்லை என்று தெரிந்தே காப்பீடு வழங்கப்பட்ட காரணத்தினால் தற்போது பதிவு சான்று இல்லை என்று ஆட்சேபிக்க முடியாது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்திற்கு விதிமீறல் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் எந்த விதிமீறலும் இல்லை என்பதால் மனுதாரர்களுக்க எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிரமான வாக்குமூல சங்கதிகள் உண்மையல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை -</u>** இல்லை

A BARSAD BEGUM Digitally signed by A BARSAD BEGUM Date: 2023.10.20 18:20:57 +0530